அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

# ஆகாசவாணி செய்திகள்

01.45 pm

**10. 08. 2025**

தலைப்பு செய்திகள்

1. **பிரதமர் திரு.நரேந்திரமோடி 15 ஆயிரத்து 610 கோடி ரூபாய்** மதிப்பிலான 3-வது கட்ட பெங்களூரு மெட்ரோ ரயில் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. **ஆரோக்கிய இந்தியாவிற்கான சைக்கிள் பயிற்சி மக்கள்** இயக்கமாக மாறியுள்ளது என்று மத்திய விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. **ஆபரேஷன்சிந்தூர் வெற்றி நமது முப்படைகளின் ஒருங்கிணைப்பை** பறைசாற்றுவதாக முப்படை தளபதி ஜென்ரல் அனில்சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. **தமிழகத்தில் துப்புரவு தொழிலாளர்களின் சலுகைகள் எதுவும்** பறிக்கப்பட மாட்டாது என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. **K.N.** நேரு உறுதிபட தெரிவித்தார்.

5. **பீஹார் ராஜ்கிரில் 20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர்** ரக்பி சாம்பியன்பட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

பிரதமர்

**பிரதமர் திரு.நரேந்திரமோடி பெங்களூரு - பெலகாவி,** நாக்பூர் - புனே, அமிர்தசரஸ் - கத்ரா இடையேயான 3 வந்தேபாரத் ரயில் சேவைகளை இன்று பெங்களூருவில் தொடங்கிவைத்தார்.

இந்த ரயிலில் பயணம் செய்த பிரதமர் மாணாக்கர் மற்றும் பொதுமக்களிடையே உரையாடினார்.

ராகிகுட்டா எலக்ட்ரானிக் சிட்டி இடையேயான மெட்ரோ வழித்தடத்தை தொடங்கி வைத்த பிரதமர் அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் உரையாற்றுகிறார்.

தொடர்ந்து இன்று பிற்பகல் பெங்களூருவில் 15 ஆயிரத்து 610 கோடி ரூபாய் மதிப்பிலான 44 கிலோ மீட்டர் நீள, 3-ம் கட்ட பெங்களூரு மெட்ரோ திட்டத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

**சுற்றுசூழல் மற்றும் ஆரோக்கிய இந்தியாவிற்கான** ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் பயிற்சி மக்கள் இயக்கமாக மாறியுள்ளதாக மத்திய விளையாட்டு இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று சைக்கிள் பயிற்சியில் ஈடுபட்ட அவர், நாட்டில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களிலும், மக்களிடையே பெரும் வரவேற்பை இந்த இயக்கம் பெற்றுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**அனில்சௌஹான்**

**ஆபரேஷன் சிந்தூர் வெற்றி நமது முப்படைகளின்** ஒருங்கிணைப்பை பறைசாற்றுவதாக முப்படை தளபதி ஜெனரல் அனில்சௌஹான் தெரிவித்துள்ளார்.

செகந்திராபாத்தில் ராணுவ மேலாண்மை கல்லூரியின் 21-வது உயர் மேலாண்மை பயிற்சி முடித்த மூத்த அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாடிய அவர், தொழில்நுட்பம் சார்ந்த நவீன போர்முறைகளில் ஒருங்கிணைந்த திறன் மேலாண்மை, சுயசார்பு மற்றும் மாறிவரும் சூழலுக்கேற்ற புரிதலின் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**தேர்தல் ஆணையம்**

**கடந்த 6 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில்** ஒருமுறைகூட போட்டியிடாத பதிவுசெய்யபட்ட கட்சிகளின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேசிய அரசியல் கட்சிகள், மாநில அரசியல் கட்சிகள் மற்றும் அங்கீகாரம் பெறாத அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்கீழ் தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**திருப்பூர் மாவட்டம் உடுமலையில் பல்வேறு** நலத்திட்ட உதவிகளை நாளை வழங்கவுள்ள நிலையில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்றிரவு கோவை செல்கிறார்.

உடுமலை நேதாஜி திடலில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதுடன், முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். புதிய பணிகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

❖❖❖❖❖❖

**சிங்கதினம்**

**உலக சிங்கதினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.**

காடுகளின் அரசன் என்று போற்றப்படும் சிங்கங்கள் வனபசுமை மற்றும் உயிரின சமநிலையை உறுதிசெய்து, விலங்குகளிடையே பரவும் நோய்களை தடுப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

உலகளவில் 20 ஆயிரம் முதல் 35 ஆயிரம் சிங்கங்கள் வரை கணக்கெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்தியாவில் மட்டும் 891 சிங்கங்கள் உள்ளன.

சிங்கங்களுக்கான வாழ்விட சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் இப்பகுதி மக்களின் பங்களிப்புடன் குஜராத் மாநிலம் Barda வனவிலங்கு சரணாலயம் சிறப்பாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக இந்த சரணாலயத்தில் மட்டும் தற்போது 17 சிங்கங்களும், 25 சிறுத்தைகளும் காணப்படுகின்றன.

மதிப்புமிக்க இயற்கை வனவிலங்கு வளத்தை பாதுகாத்து சீரான வளர்ச்சி என்ற மத்திய அரசின் தொலைநோக்கு திட்டத்தின்கீழ் நீடித்த வன உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உறுதிசெய்யப்பட்டு வருகின்றன.

❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**தமிழகத்தில் துப்புரவு தொழிலாளர்களின் ஊதியம்** குறைக்கப்படாது என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் துப்புரவு தொழிலாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அவர்களுக்கான சலுகைகள் பறிக்கப்படாது என உறுதியளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலனவை நிறைவேற்றப் பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக திருச்சி பஞ்சபூர் பேருந்து முனையத்தில் தாழ்தள பேருந்து மற்றும் ஆம்னி பேருந்து சேவைகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், துப்புரவு தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு உடனான பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்படும் என்றார். இதற்கான பேச்சுவார்த்தை அடுத்த ஓரிரு நாட்களில் நடைபெறும் என்றார்.

❖❖❖❖❖❖

**மு.பெ.சாமிநாதன்**

**திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில்** மாநில செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖

குடற்புழு நீக்க முகாம்

**தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும்** 2-ம் கட்ட தேசிய குடற்புழு நீக்க முகாம் நாளை நடைபெறுகிறது.

குழந்தைகள், வளர்இளம் பருவத்தினர், கர்பிணி பெண்களுக்கு ரத்தசோகை வராமல் தடுப்பதற்கான மாத்திரைகள் இம்முகாமில் வழங்கப்பட உள்ளன.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு பள்ளிகளில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும் இம்முகாமை

முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்

விடுபட்டவர்களுக்கு வரும் 18-ம் தேதி இம்மாத்திரைகள் வழங்கப்படும்.

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை கடற்படையினரால் கைது** செய்யப்பட்டுள்ள 61 மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ராமேஸ்வர மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 7 மீனவர்களை எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்த நிலையில், மீனவ சங்க பிரதிநிதிகளின் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖

புலி

**நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதிகளில்** சுற்றித்திரியும் புலியை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் 3-வது நாளாக இன்றும் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**கன்னியாகுமரி கடலில் நீர்மட்டம் தாழ்வாக** காணப்படுவதால் விவேகானந்தர் நினைவுபாறை திருவள்ளுவர் சிலை உள்ளிட்டவற்றிற்கான படகு போக்குவரத்து தற்காலிகமாக இன்று நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

❖❖❖❖❖❖

இருவரி

**மத்திய அரசின் பசல்பீமா யோஜனா திட்டத்தின்கீழ்** துவரை, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் வரும் 16-ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளலாம் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் தூய்மை பணியாளர்கள்** சுகாதார முறையில் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 2 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 270 மின்கல வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி கூறியுள்ளார்.

**சேலம் காந்தி விளையாட்டு மைதானத்தில் ஆயுள்** காப்பீடு நிறுவன ஊழியர்கள் கூட்டமைப்பு சார்பில் வலிமையான இந்தியாவை உருவாக்குவோம் என்ற கருப்பொருளை வலியுறுத்தி மாரத்தான் போட்டிகள் இன்று நடைபெற்றன.

**தமிழ்நாட்டில் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும்** வேர்களை தேடி திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திற்கு 14 நாடுகளை சேர்ந்த 100 அயலக தமிழர்களுடன் ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் இன்று கலந்துரையாடினார்.

கன்னியாகுமரி மாவட்டம் வலியாற்றுமுகம் அங்கன்வாடி மையத்தை ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

**ராணிப்பேட்டை மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாக** பெய்த கனமழையால் ராமாபுரம், வல்லுவம்பாக்கம், செங்காடு மோட்டூர், உள்ளிட்ட கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில் இவற்றிற்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

❖❖❖❖❖❖

**கோவில்**

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி** திருக்கோவில் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலபூஜை நாளையுடன் நிறைவடையும் நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு இன்று வந்த வண்ணம் உள்ளனர். இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖

**வானிலை வாய்ஸ்**

தென்னிந்திய பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருவண்ணாமலை, கடலூர், அரியலூர், சிவகங்கை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு.செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

**ரக்பி**

**பீஹார் ராஜ்கிரில் 20 வயதிற்குட்பட்டோருக்கான** ஆசிய மகளிர் ரக்பி சாம்பியன்பட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா - சீனாவையும், உஸ்பெகிஸ்தான் - ஹாங்காங்கையும் எதிர்கொள்கின்றன.

இன்று நடைபெற்ற ஆடவர் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை - சீனாவை 26 - 17 என்ற புள்ளி கணக்கில் வென்றது.

❖❖❖❖❖❖

**அலைச்சறுக்கு**

**மகாபலிபுரத்தில் நடைபெற்ற ஆடவர் ஆசிய** அலைச்சறுக்கு சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கல பதக்கம் வென்றார்.

இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் 12.60 புள்ளிகளுடன் வெண்கல பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை ரமேஷ் புதிஹால் பெற்றுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖